# மார்ச் - 23 - வெள்ளி

தூய துர்பியுஸ்

ஆண்டவர் என் கற்பாறை: என் கோட்டை என் மீட்பர்: திபா. 18:2

## முதல் வாசகம் : ஏரேமியர் 20 : 10 – 13

அந்நாட்களில் ஏரேமியா கூறியதாவது: "சுற்றிலும் ஒரே திகில்!" என்று பலரும் பேசிக் கொள்கின்றார்கள்" பழிசுமத்துங்கள் வாருங்கள், அவன்மேல் பழி சுமத்துவோம்" என்கிறார்கள். என் நண்பர்கள்கூட என் வீழ்ச்சிக்காகக் காத்திருக்கிறார்கள் "ஒருவேளை அவன் மயங்கிவிடுவான் நாம் அவன்மேல் வெற்றி கொண்டு அவனைப் பழி தீர்த்துக் கொள்ளலாம்" என்கிறார்கள். ஆனால், ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப் போல என்னோடு இருக்கிறார். எனவே என்னைத் துன்புறுத்துவோர் இடறி விழுவர். அவர்கள் வெற்றிகொள்ள மாட்டார்கள். அவர்கள் விவேகத்தோடு செயல்படவில்லை அவர்களின் அவமானம் என்றும் நிலைத்திருக்கும் அது மறக்கப்படாது. படைகளின் ஆண்டவரே! நேர்மையாளரை சோதித்தறிபவரும் உள்ளுணர்வுகளையும் இதயச் சிந்தனைகளையும் அறிபவரும் நீரே நீர் என் எதிரிகளைப் பழி வாங்குவதை நான் காணவேண்டும் ஏனெனில், என் வழக்கை உம்மிடம் எடுத்துரைத்துள்ளேன். ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள் அவரைப் புகழ்ந்தேத்துங்கள் ஏனெனில், அவர் வறியோரின் உயிரைத் தீயோரின் பிடியினின்று விடுவித்தார்.

**பதில்பாடல் :** என் நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன்.

## நற்செய்தி : யோவான் 10 : 31 – 42

அக்காலத்தில் இயேசுவின்மேல் எறிய யூதர்கள் மீண்டும் கற்களை எடுத்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, "தந்தையின் சொற்படி பல நற்செயல்களை உங்கள் முன் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள் எச்செயலுக்காக என்மேல் கல்லெறியப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார். யூதர்கள் மறுமொழியாக, "நற்செயல்களுக்காக அல்ல, இறைவனைப் பழித்துரைத்ததற்காகவே உன்மேல் கல்லெறிகிறோம். ஏனெனில் மனிதனாகிய நீ உன்னையே கடவுளாக்கிக் கொள்கிறாய்" என்றார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, ""நீங்கள் தெய்வங்கள் என நான் கூறினேன்" என்று உங்கள் மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா? கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக் கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள். மறைநூல் வாக்கு என்றும் அழியாது. அப்படியானால் தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை " இறை மகன் "என்று சொல்லிக் கொண்டதற்காக "இறைவனைப் பழித்துரைக்கிறாய்" என நீங்கள் எப்படிச் சொல்லலாம்? நான் என் தந்தைக்குரிய செயல்களைச் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்ப வேண்டாம். ஆனால் நான் அவற்றைச் செய்தால், என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள் அதன்மூலம் தந்தை என்னுள்ளும் நான் அவருள்ளும் இருப்பதை அறிந்துணர்வீர்கள்" என்றார். இதைக்கேட்டு அவர்கள் அவரை மீண்டும் பிடிக்க முயன்றார்கள். ஆனால் அவர்கள் கையில் அகப்படாமல் அவர் அங்கிருந்து சென்றார். யோர்தானுக்கு அப்பால் யோவான் முதலில் திருமுழுக்குக் கொடுத்துவந்த இடத்திற்கு இயேசு மீண்டும் சென்று அங்குத் தங்கினார். பலர் அவரிடம் வந்தனர். அவர்கள், "யோவான் அரும் அடையாளம் எதையும் செய்யவில்லை ஆனால் அவர் இவரைப்பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையாயிற்று" எனப் பேசிக்கொண்டனர். அங்கே பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் கடவுளின் வார்த்தையைப் பெற்றுக் கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகின்றார்கள். இறைவனைப் பழித்துரைத்ததற்காக அவரை யூதர்கள் அவரை கல்லால் எறியப் பார்க்கின்றார்கள். கிறிஸ்தவ வாழ்வு என்பது சவால் நிறைந்தது. போராட்டம் நிறைந்தது சோதனைகள் அடங்கியது. நம் இறைவன் மனித அவதாரம் எடுத்து இவ்வுலகில் சீடர்களுடன் வாழ்ந்த போது அவருக்கு ஏற்பட்ட சோதனைகள், போராட்டங்கள் பழிச்சொற்கள், அவமானங்கள் அனைத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார் அதனால் ஏற்றம் பெற்றார். தடைக்கற்களாக அவற்றை நினைக்காமல் படிக்கற்களாக எண்ணி தந்தையின் சொற்படி பல நற்செயல்களைப் புரிந்து மனிதம் புனிதமானது. எமது வாழ்விலும் இறைவனுக்காக பணிவாழ்வில் ஈடுபடும்போது கருத்து வேறுபாடுகளுக்கும் , இகழ்ச்சிக்கும் கல்லடிக்கும் சொல்லடிக்கும் நாம் ஆளாக வேண்டி வரும். எமக்கு எறியப்படும் கற்களை நாம் திருப்பி எறியாமல் கடவுள் பணியை செய்யும போது அவற்றை கொண்டு நாம்அழகான கோயில் கட்டலாம். நாம் துன்பப்படுகின்ற போது இறைவனின் பல வெளிப்பாட்டுக்கான கருவியாக பயன்படுத்தப்படுகின்றேன் என விசுவாசம் கொள்வோம்.